திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கக்கூடிய நிலைமைகள் பற்றி நேற்று இங்கே ஒத்திவைப்புத் தீர்மானத்தில் கூட, மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும், தங்கள் கருத்துக்களை வலியுறுத்துகின்ற வகையில் மேற்கொண்டு உண்ணாவிரதம் இருக்கப்போவதாக சொல்லியிருக்கிறார்கள். கோவையிலும், மதுரையிலும், என்னுடைய குழந்தையும் கூட சாகும் வரை மற்றவர்களோடு சேர்ந்து உண்ணாவிரதம் இருப்பதாகத் தகவல் அந்த மாணவர்கள் எல்லோரும் இப்போது மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. எனவே சம்பந்தப்பட்ட மாணவர் பிரதிநிதிகளை அழைத்துப் பேசமுடியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேளாண்மைத் துறை அமைச்சரைக் கேட்டுக் சொல்கிறேன்.

(ஈ) ராமபிரசாத் ராவ் கமிஷன் அறிக்கை மீது விவாதம் குறித்து.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நிகழ்ச்சி நிரலை 30 நாட்களுக்கு தாங்கள் கொடுத்திருக்கிறீர்கள், பிறகு தேவைப்பட்டால், எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் ராம்பிரசாத் ராவ் கமிஷன் அறிக்கையின் மீதான விவாதத்திற்கு ஒரு நாள் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லிவிட்டு............(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கட்சித் தலைவரிடம் சொல்லி, அலுவல் ஆய்வுக் குழுவில் இதைப்பற்றி பேசச் சொல்லுங்கள். அப்போது அதைப்பற்றிப் பேசி, முடிவு எடுக்கலாம்.

3. ஒழுங்குப் பிரச்சினை.

அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர் அவையில் இல்லாதபோது அவர் கொடுத்துள்ள கவன ஈர்ப்பை எடுத்துக்கொள்வது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது கவன ஈர்ப்புத் தீர்மானம். டாக்டர் சமரசம் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவையில் இல்லை. என்றாலும், அதற்கான பதிலை அமைச்சர் அவர்கள் சொல்லலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS